# சோதனைகள் எனக்குப் புதிதல்ல! சோதனைகளை வென்று வளர்ந்தவன் நான்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆளுநர் அவர்கள், தன்னுடைய உரையை வாசிக்காமல் வெளியேறியது ஏன் என 13 குற்றச்சாட்டுகளோடு ஒரு அறிக்கையை ஆளுநர் மாளிகை வெளியிட்டிருக்கிறது. நான் அவருக்குச் சொல்ல விரும்புவது, கடந்த நிதியாண்டில், 11.19 விழுக்காடு அளவுக்கு நாட்டிலேயே உயரிய பொருளாதார வளர்ச்சியைத் தமிழ்நாடு அடைந்திருக்கிறது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு மீண்டும் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டியிருக்கிறது. இதைச் சொல்வது, நாங்கள் அல்ல. ஒன்றிய அரசின் புள்ளியியல் துறை. ஆளுநர் கேள்வி கேட்க வேண்டுமென்றால், அவரை இங்கே அனுப்பி வைத்த ஒன்றிய அரசைத் தான் கேட்க வேண்டும். இன்னும் அவருக்கு நான் சில புள்ளிவிவரங்களைச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 17 இலட்சத்து 23 ஆயிரத்து 698 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் 3 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய். இது தேசிய சராசரியை விட 1.74 மடங்கு அதிகம். அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 98.3 விழுக்காடு அறிவியல் ஆய்வக வசதிகள் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. ஆனால், அகில இந்திய அளவில் 50 விழுக்காடு பள்ளிகளில் தான் இந்த வசதி இருக்கிறது.

### நிலையான வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடம்!

உயர்கல்விநிறுவனங்களுக்கான ஒன்றிய அரசின் தரவரிசையில், தலைசிறந்த 100 கல்லூரிகள் பட்டியலில் 33 கல்லூரிகள் தமிழ்நாட்டில் மட்டுமே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசுகளால் நடத்தப்படும் தலைசிறந்த 50 பல்கலைக் கழகங்களில் 10 பல்கலைக்கழகங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில், தமிழ்நாடு 788 புள்ளிகளோடு, இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டினுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஒன்றிய அரசின் பொருளாதார ஆலோசனைக் குழு அறிக்கையாகத் தாக்கல் செய்திருக்கிறது. சமூக முன்னேற்றக் குறியீடு என்று இதற்குப் பெயர். பெரிய மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு 63.33 புள்ளிகள் பெற்று, தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கிறது. இது, தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலம் என்பதைக் காட்டுகிறது.

இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் தொகை 11.2 விழுக்காடு. ஆனால், தமிழ்நாட்டில்

## தேசவிரோதிகள் யாரென்று மக்களுக்கு நன்றாகத் தெரியும்!

வறுமைக் கோட்டிற்குக்கீழ் 1.43 விழுக்காடு மக்கள்தான் இருக்கிறார்கள். அதையும் இல்லாமல் ஆக்குவதற்கு, தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட தமிழ்நாடு!

**நம்முடைய அரசின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், ஐ.நா. அமைப்பின் விருதைப் பெற்றிருக்கிறது. இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) புத்தாக்க நிறுவனங்களை உருவாக்குவதில்** Best Performer State. Startup **தரவரிசைப் பட்டியலில், 2018ல் கடைசியில் இருந்த தமிழ்நாடு 2022ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் முதலிடத்தை அடைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**ஏற்றுமதி தயார்நிலை குறியீட்டில், இந்தியாவிலேயே தமிழ்நாடு 80.89 புள்ளிகளுடன் முதலிடம். மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில் தேசிய அளவில் 41.23 விழுக்காடு பெற்று நாட்டிலேயே முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி)**

**தோல் பொருட்கள் மற்றும் ஜவுளி ஆகிய பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாநிலம். ஒட்டுமொத்த நாட்டின் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு 38 விழுக்காடு பங்கு வகிக்கிறது.**

**பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த, 20 ராம்சார் தளங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு உற்பத்தித் திறனில் முதலிடம். மக்காச்சோள உற்பத்தித் திறனில் இரண்டாம் இடம்.**

**சட்டம்ஒழுங்கைப் பொறுத்தவரைக்கும், கடந்தகால அதிமுக ஆட்சியோடு ஒப்பிடுகையில், கொலைகள் ஆதாயக் கொலைகள் வழிப்பறித் திருட்டு பாலியல் வன்கொடுமைகள் என்று எல்லாமே பெருமளவில் குறைந்திருப்பதை புள்ளிவிவரங்கள் உறுதியாக்குகின்றன.**

**அதிக அளவு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்த மாநிலமாக இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடம்.**

**69 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற்று இந்திய அளவில் தமிழ்நாடு 2வது இடத்தில் இருக்கிறது.**

**நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வரும்போது 73ஆக இருந்த பேறுகால இறப்பு விகிதத்தை 40ஆகவும், குழந்தை இறப்பு விகிதத்தை 10.4லிருந்து 6.9ஆகக் குறைச்சிருக்கோம்.**

**மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பாக சேவை புரிந்த முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு ஒன்றிய அரசால் தமிழ்நாடு விருது பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**சிறந்த நீர் மேலாண்மைக்காக தேசிய அளவில் மூன்றாம் இடம்.**

**காசநோயை ஒழிக்க தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.**

**காகிதம் இல்லா சட்டமன்றத் திட்டத்தினை மிகச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தியதற்காக ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகம் விருது வழங்கி இருக்கிறது.**

**உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காக தமிழ்நாட்டுக்கு விருது வழங்கப் பட்டிருக்கிறது.**

**மாநில கூட்டுறவு வங்கியின் சிறந்த சேவைக்காக உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களே விருது வழங்கியிருக்கிறார்.**

**இப்படி ஒன்றிய அரசிடமிருந்து மட்டும் தமிழ்நாடு 65க்கும் மேற்பட்ட விருதுகளை வாங்கியிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் ஆளுநர் விமர்சிக்கிறார் என்றால் அவருடைய பார்வைதான், பழுதுபட்ட பார்வையாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)**

### மதச் சண்டை சாதிச் சண்டை இல்லை!

**நமது அரசு செய்து கொண்டிருக்கிற திட்டங்களைப் பார்த்து, கேட்டு, அவற்றைத் தங்களுடைய மாநிலங்களிலேயும் செயல்படுத்த பல்வேறு மாநிலங்களிலிருந்து அதிகாரிகள் வந்து தெரிந்து கொண்டு போகிறார்கள். ஏன், நம்முடைய திட்டங்களை ஒன்றிய அரசே "அடாப்ட்" பண்ணி நாடு முழுக்க செயல்படுத்துகிறார்கள். நம்மை விமர்சிக்கின்ற ஆளுநருக்கு, இவையெல்லாம் மட்டும் தெரியாமல் இருப்பது தான் வியப்பாக இருக்கிறது. இங்கே மதச்சண்டை இல்லை. சாதிச்சண்டை இல்லை. கும்பல் வன்முறை இல்லை. தொடர் வன்முறை இல்லை. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

இந்தச் சாதனைகளின் வரிசையில் மேலும் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புறேன்.

### முதல் அறிவிப்பு:

'கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்' கீழ் ஏற்கெனவே 2 இலட்சம் வீடுகள் உருவாகும் நிலையில் மேலும் புதிதாக, 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சம் வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### இரண்டாவது அறிவிப்பு:

கிராமப்புறப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக விளங்குகின்ற ஊரகச் சாலைகளை மேம்படுத்துகிற 'முதல்வரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், 8 ஆயிரத்து 911 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 ஆயிரத்து 484 கிலோமீட்டர் நீளமுள்ள கிராமப் புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்

## ஆளுநரின் செயல், மக்களாட்சிக்கு விடப்பட்ட சவால்!

ளன. மேலும், புதிதாக, ஆயிரத்து 88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 2,200 கிலோ மீட்டர் கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### மூன்றாவது அறிவிப்பு:

ஏழை மற்றும் விளிம்பு நிலையில் வாழும் மக்களைப் பாதுகாக்கும் 'சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்' கீழ், ஏற்கனவே 33 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற, திருமணமாகாத பெண்கள் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வரும் நிலையில், 'உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்' கீழ் அளித்த விண்ணப்பங்கள் உள்ளிட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் கூடுதலாக 1 இலட்சத்து 80 ஆயிரம் நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான விழா வரும் 4.02.2026 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### அடுத்த அறிவிப்பு:

இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதன்முறையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 2008ல் சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கினார். அந்தச் சாதனையின் தொடர்ச்சியாக சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்களுக்கான ஓய்வூதியம் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 400 ரூபாயாகவும்; பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டு மொத்தத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் வன களப்பணியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 200 ரூபாயாகவும், பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டு மொத்தத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அங்கன்வாடி உதவியாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ஆயிரத்து 200 ரூபாயும், மேலும், சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் வன களப்பணியாளர்கள் உள்ளிட்ட இதர சிறப்பு காலமுறை ஊதியப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு, குடும்ப ஓய்வூதியமாக ஆயிரத்து 100 ரூபாயும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் அங்கன்வாடி உதவியாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட இதர சிறப்பு காலமுறை ஊதியப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு ஓய்வூதியம் பெற்றுவரும் மேற்கூறிய பணியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் இறந்த பணியாளர்களின் இறுதிச் சடங்குச் செலவினங்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்புகள் மூலம் தற்போதுள்ள சிறப்புக் காலமுறை ஊதியப் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களும், இத்தகைய பணியிடங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### அடுத்த அறிவிப்பு:

அரசுப் பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்களாக பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளில் ஆசிரியர்களுக்கான ஊதிய உயர்வு மற்றும் விடுமுறை காலமான மே மாதத்தில் ஏற்கனவே அவர்கள் கோரிய ஊதியம் ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன.

அவர்களுடைய அடுத்த முக்கிய கோரிக்கையான நிரந்தரப் பணி நியமனத்தைப் பொறுத்தவரையில் ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புறேன்.

அரசுப் பள்ளிகளில் காலியாக இருக்கும் நிரந்தர ஆசிரியர் பணியிடங்களில் பகுதிநேர ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட ஏதுவாக, இதற்கான தேர்வுகளில் பகுதிநேர ஆசிரியர்களின் பணிக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு சிறப்பு மதிப்பெண் அளிக்கப்படும். இதற்கான ஆணைகள் விரைவில் வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### சமூக நீதி சம நீதியை நிலைநாட்டியிருக்கிறோம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தேர்தலின்போது யாரும் கொடுக்காத வாக்குறுதிகளை நாங்கள் கொடுத்தோம். முடிந்தளவுக்கு அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும் இருக்கின்றோம்.

"உங்களால் நிறைவேற்ற முடியாதென்று" சவால் விடப்பட்ட வாக்குறுதிகளையும் நாங்கள் நிறை வேற்றிக் காட்டியிருக்கின்றோம்.

"இவர்கள் செய்யவேமாட்டார்கள்" என்று சொல்லப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளும் எப்போது வளரும் என்ற ஏக்கத்தில் இருந்தவர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்கு அனைத்துத் துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சியை அடைந்திருக்கின்றோம்.

பெரிய நகரங்களுக்கு மட்டும் தான் தொழிற்சாலைகளா? பாலங்களா? சாலைகளா? நூலகங்களா? கல்லூரிகளா? உள்கட்டமைப்பு வசதிகளா? என்று சலிப்புடன் கேட்டதை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து மாவட்டங்களுக்கும் அனைத்தையும் கொண்டு சென்றிருக்கின்றோம்.

இவை அனைத்திலும் சமூக நீதியை, சமநீதியை நிலைநாட்டியிருக்கின்றோம். இவையனைத்தும் என்னால்தான் ஆனதென்று கர்வம் கொள்பவன் அல்ல நான். மூத்த அமைச்சர்கள், நம்முடைய துணை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையின் பங்களிப்பு இல்லாமல் இதைச் செயல்படுத்தியிருக்க முடியாது. ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் வழங்கிய இங்கே இருக்கின்ற இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் சாதனைகள் இல்லை. அதுமட்டுமல்ல, தலைமைச் செயலாளர் தொடங்கி காவல் துறை உள்ளிட்ட அனைத்து அரசுத் துறை அதிகாரிகள், அனைத்து நிலைகளிலும் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் வரை அனைவரின் பங்களிப்பும் இதில் இருக்கிறது.

தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதருக்கும் அனைத்துத் திட்டங்களும் சென்று சேருவதை உறுதி செய்கின்றோம். 'ஊர் கூடித் தேர் இழுப்பதென்று' சொல்வார்களே, அதைப் போல அரசின் ஒவ்வொரு அணுவும் மக்களுக்காக செயல்படுவதால்தான் இது சாத்தியமாயிற்று.

எனக்கு உயிரும் உணர்வுமாக இருந்து, என்னை இயக்கிக் கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான உடன்பிறப்புகள்தான். எனக்கு மனவலிமை கொடுப்பதும், அனைத்து வகையிலும் தோள் கொடுப்பதும் எங்களோட தோழமைக் கட்சிகள்தான்!

### பேரவைத் தலைவருக்கு நன்றி!

ஜனநாயகத்தின் ஒரு பக்கம் ஆளும்கட்சியென்றால் இன்னொரு பக்கம் எதிர்க்கட்சிகள். மக்கள் மன்றத்தில் தேவையற்ற பல விமர்சனங்களை வைத்தாலும் இந்தச் சட்டமன்றத்தில் சில ஆலோசனைகளையும் வைத்த எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனிவான நேரத்தில் கனிவாகவும், கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும், ஆசிரியராகவே செயல்பட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணைத் தலைவர், பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 17 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். 5 உறுப்பினர்கள், 58 திருத்தங்களை வழங்கியிருக்கின்றார்கள். இந்த அரசுக்கு உதவுகின்ற வகையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, சில கோரிக்கைகளையும் முன்வைத்திருக்கிறார்கள்.

### நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!

அவையனைத்தும் அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய ஆலோசனைகளைக் கருத்தில்கொண்டு, அவற்றில் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு உறுதியாக நிறைவேற்றித் தரும். எனவே, இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நான் சொல்வது ஒன்றுதான். நான் இந்த ஐந்தாண்டு காலத்தில் எனக்கும், என் மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டு தினந்தோறும் திட்டங்களைத் தீட்டி உழைத்திருக்கின்றேன். இன்னும் உழைக்கக் காத்திருக்கின்றேன். இந்த 5 ஆண்டு கால உழைப்பையும் வளர்ச்சியையும் பார்த்து, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்.

எனக்கு, என்னைவிட தமிழ்நாட்டு மக்கள் மேல் கூடுதலான நம்பிக்கை இருக்கிறது. உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள்தான் மீண்டும் வருவோம்! நாங்கள்தான் மீண்டும் வருவோம்! மீண்டும் மீண்டும் வருவோம்! மீண்டும் வெல்வோம்! மீண்டும் மீண்டும் வெல்வோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



அன்னை தமிழை காத்திட தன்னை தமிழ் மண்ணுக்கு ஈந்த தியாக சுடர்களான மொழிப் போர்த் தியாகிகளின் திருவுருவப் படங்களுக்கு, கரூர் கலைஞர் அறிவாலயத்தில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.